# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/82 - 2022 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2022.04.01

*2273/82 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் சாசனம்*

*2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க (திருத்தச்) சாசனத்தின் மூலம் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரினால் செய்யப்பட்ட கட்டளைகள்.*

அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் **வசந்த கரண்ணாகொட**,
ஆளுநர்,
வடமேல் மாகாணம்.

குருநாகல்,
*2022, மாச்சு 15.*

**கட்டளை**

*2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி 1685/11 ஆம் இலக்கத்திற்கான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மாகாண சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) கட்டளை கீழ் காட்டப்பட்டுள்ளவாறு இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.*

*01.* இங்கு *6* ஆம் கட்டளையில் (ஆ) பந்திக்கு பதிலாக கீழ் காட்டப்பட்டுள்ள பந்தியை மாற்றீடு செய்வதனால்,

"(ஆ) சாசனத்தில் *21 (2)* ஆம் பிரிவின் கீழ் இடை நிறுத்துவதற்கு அல்லது இரத்துக் செய்வதற்கு உட்பட்டு, மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்படாதவாறு உரிமப்பத்திரத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு செல்லுபடியாகும்."


1A - PG 5803 — 11 (2022/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

02. இங்கு II ஆம் உப அட்டவணையில் "ஆ" படிவத்தில் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளது I ஆம் உருப்படிக்கு பதிலாக கீழ்க் காணப்படும் உருப்படியினை மாற்றீடு செய்வதனால்:-

"1. உரிமப்பத்திரம். அவ் உரிமப்பத்திரத்தில் குறிப்பாக குறிப்பிடப்படுகின்ற காலத்திற்காக செல்லுபடியாக வேண்டும். அக் காலத்தினுள் உரிமப்பத்திரத்தினை வழங்குகின்ற திகதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படலாகாது. உரிமப்பத்திரத்தில் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்தில் முதலாவது உரிமப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

EOG 04 - 0007/1

---

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் சாசனம்*

*2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கத்திற்கான திருத்தச் சாசனத்தின் மூலம் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரினால் செய்யப்பட்ட கட்டளைகள்.*

அட்மிரால் ஒஃப் த ஃப்லீட் **வசந்த கரண்ணாகொட,**
ஆளுநர்,
வடமேல் மாகாணம்.

குருநாகல,
2022, மாச்சு 15.

**கட்டளை**

1968 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி 1020/21 ஆம் இலக்கத்திற்கான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திட்டத்தினை அங்கீகரிக்கும் கட்டளை கீழ்க் காட்டப்பட்டுளளவாறு திருத்தம் செய்யப்படும்.

01. அதன் 4 ஆவது கட்டளையில் (iii) ஆம் பந்தியினை நீக்குவதனால்,

02. அதன் 9 ஆவது கட்டளையில் (i) ஆம் பந்தி (ii) ஆம் பந்தி மற்றும் (iii) ஆம் பந்திகளை நீக்குவதனால்,

03. அதன் 10 ஆவது கட்டளைக்காக கீழ்க் காட்டப்பட்டுள்ள கட்டளையினை மாற்றுதவதனால்,

"10 அடிப்படை சுற்றாடல் ஆய்வு அறிக்கை கிடைத்த பின்பு, திட்டத்தினை அங்கீகரிக்கும் முகவர் நிறுவனத்தினால் 21 நாட்களுக்குள்-

(i) குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன்மொழியப்பட்ட திட்டத்தை செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்; அல்லது

(ii) சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு திட்ட முன்மொழிபவருக்கு கோரிக்கை ஒன்றினை வைக்கப்பட வேண்டும்; அல்லது

(iii) நிராகரிப்புக்கு வழிவகுத்த காரணங்களைக் காட்டி முன்மொழியப்பட்ட திட்டத்தை செயல்படுத்துவதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட வேண்டும்."

EOG 04 - 0007/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.